**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

Calender :
Preliminary Register :
Sessions :

Miscellaneous :
Case No. : **S.C.50/2023**

Deposition of witness for :

Prosecution : **P.W. 4**
Defence : **D.W.**
Court : **C.W.**

| Name : | யுவராஜா | S/o.(or)W/o. : | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **25.07.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் பாரதிதாசன் நகரில் வசிக்கிறேன். எலக்ட்ரீசியன் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துபோன ராமகிருஷ்ணனை தெரியும். அவர் 1ம் எதிரி கணவராவர். ராமகிருஷ்ணன் வீட்டில் அவருக்கும் அவருடைய மனைவிக்கும் இடையே குடும்ப தகராறு. அடிக்கடி சின்ன தகராறு வந்துகொண்டிருக்கும். 23.03.2023ம் தேதி பிரச்சனை நடந்தது. நான் வீட்டில் இருக்கும்போது ராமகிருஷ்ணனின் அம்மா என்னிடம் ஓடிவந்து அருவருடைய சின்னமகன் செல்வகுமாருக்குபோன் செய்து தர சொன்னார். நான்அவருடைய போனில் போன் செய்து கொடுத்தேன். அதன்பிறகு செல்வகுமாரிடம் அவர் பேசினார். என்ன பேசினார் என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு செல்வகுமார் வந்துவிட்டார். குடும்ப சண்டை பற்றி அவர்கள் பேசிக்கொண்டார்கள். அவ்வாறு போன் செய்து கொடுக்கும் போது காலை 11.00, 12.00 மணி இருக்கும். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அடுத்தநாள் காலையில் ராமகிருஷ்ணன் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

அன்று காலை 4, 5 மணியளவில் ராமகிருஷ்ணனின் அம்மா என்னிடம் வந்து பிரட்டி பார்த்ததில் மூச்சு, பேச்சு இருப்பதாகவும், தம்பிக்கு போன் செய்து கொடுங்கள் என்று சொன்னார்கள். நான் போன் செய்து கொடுத்தேன். அவர் பேசினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

செல்வகுமார் வீட்டிற்கு 3 வீடு தள்ளி என் வீடு உள்ளது. செல்வகுமார் என்னுடன் படித்தவர். நான் அதே வீட்டில் தான் வசிக்கிறேன். செல்வகுமார் வீட்டின் மேல்புறம் உள்ள வீட்டில் எதிரி மலர்கொடியும் அவர் கணவரும் இருந்தார்கள். 2019ம் ஆண்டிலிருந்து எதிரி வெங்கடேசன் பூலாம்பாடியில் உள்ள அவர் பாட்டி வீட்டிலிருந்து வேலைக்கு வந்து கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 2ம் எதிரி அவர் பெற்றோருக்கு தெரியாமல் கலப்பு திருமணம் செய்துகொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணன் குடித்துவிட்டு வந்து 1ம் எதிரியை அடிப்பார் என்றால் அவர்கள் சண்டை போடுவது தான் எனக்கு தெரியும். நான் அடிக்கடி அவர்கள் சண்டை போடும் போது நான் போய் விலக்கி விடுவேன் என்றால் 1வது எதிரி கெட்டவார்த்தை சொல்லி திட்டும் போது தெருவில் மக்கள் உள்ளார்கள் அவ்வாறு பேசாதீர்கள் என்று சொல்லுவேன். ராமகிருஷ்ணனை ஏன் அடிக்கிறீர்கள் என்று நான் கேட்க மாட்டேன். அது அவர்கள் குடும்ப பிரச்சனை ஆகும். 25.03.2023 ம்தேதி எத்தனை மணிக்கு அ.சா.2 போன் செய்து கொடுக்கமாறு சொன்னார் என்றால் நான் 11 மணிவாக்கில் வீட்டிற்கு சாப்பிட வந்தேன். அப்போது வந்து சொன்னார். செல்வகுமார் எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி ராமகிருஷ்ணனுக்கு கத்தியால் காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் ஏற்றி சென்ற விவரம் எனக்கு தெரியாது. ஒருத்தர் துணை இல்லாமல் அ.சா.2 வீட்டிற்கு வரமுடியாது என்றால் சரிதான். யாருடைய உதவியுடன் என்னுடைய வீட்டிற்கு அவர் வந்தார் என்றால் அவராக தான் வந்தார். மறுநாள் காலையில் அவர் என் வீட்டிற்கு வரும்போது இருட்டான நேரம் என்பதால் யாருடைய உதவியுடன் வந்தார் என்றால் அவராக தான் வந்தார். அப்போது விடியற்காலை

சுமார் 5, 6 மணி இருக்கும். அதன்பிறகு நான் அ.சா.2ன் வீட்டிற்கு சென்று நான் பார்க்கவில்லை. காலையில் செல்வகுமார் எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். உடலை எடுத்த அன்று என்னிடம் விசாரித்தார்கள். அப்போது காலை 10.00 மணிக்கு மேல் இருக்கும். அப்போது SI உடன் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என்னுடன் யாரும் இல்லை. நான் தற்போது நீதிமன்றில் சொன்னபடி தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். செல்வகுமார் என்னுடன் படித்தவர் என்பதால், அவருடைய அம்மா சொல்லி அவருக்கு போன் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.